# SENGUNTHAR

# Daily News

**08-07-2025/SEC/DN/210**




| S.No | Name of the Department | Employment Name | Education Qualification | Age Limit &Salary | Link / Refernce | Last Date to Apply |
|---|---|---|---|---|---|---|
| 1 | Pawan Hans | Engineer Trainee | B.E / B.Tech | NA & 50000-160000 | www.pawanhans.co.in | 21.07.25 |
| 2 | SBI | Probationary Officer | Any Degree | 21 – 30 & 48480 | www.bank.sbi/web/careers/current.opening | 14.07.25 |
| 3 | Dhanalakshmi Bank | Officer & Manager | Any Degree | 21 – 28 & NA | www.dhanbank.com/careers | 12.07.25 |
| 4 | NACIL | Graduate Aprentice | B.E / B.Tech | 18 – 26 & Stipend 9000 | www.nat.education.gov.in www.npcil.nic.in | 21.07.25 |
| 5 | C-DAC | Project Enginner (Fresher) | B.E / B.Tech | 30 - NA | Direct Interview | 09.07.25 |

## SEC NEWS IN DAILIES



### செங்குந்தர் பொறியியல் கல்லூரி வெள்ளி விழா: ஊழியர்கள் கௌரவிப்பு

திருச்செங்கோடு செங்குந்தர் கல்லூரி வெள்ளி விழாவில் மாணவர்களுக்கு இனிப்புகளை வழங்கிய தாளாளர் ஆ.பாலதண்டபாணி.

**திருச்செங்கோடு, ஜூலை 4:** செங்குந்தர் பொறியியல் கல்லூரியின் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழா வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு கல்வி நிறுவன தலைவர் ஜான்சன்ஸ் டி.எஸ்.நடராஜன் தலைமை வகித்தார். தாளாளர் ஆ.பாலதண்டபாணி கல்லூரியின் பயண வரலாறு குறித்து பேசினார். பொருளாளர் எம்.கே.தனசேகரன், செயல் இயக்குநர் அரவிந்திருநாவுக்கரசு ஆகியோரும் சிறப்புரையாற்றி வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

முதல்வர் ஆர். சதீஷ்குமார் கல்லூரியின் சாதனைகளை பட்டியலிட்டு, மாணவர்களின் முன்னேற்றம் குறித்து பேசினார்.

வெள்ளி விழா அடையாளச் சின்னம் வெளியிடப்பட்டது. கல்லூரியின் முதல்நாள் தொடங்கி 25 ஆண்டுகளாகப் பணியாற்றிய மற்றும் மூத்த பேராசிரியர்கள், பணியாளர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர்.

தினமணி Sat, 05 July 2025 https://epaper.dinamani.com/c/7768



தினகரன் Dinakaran

### செங்குந்தர் பொறியியல் கல்லூரியின் வெள்ளி விழா கொண்டாட்டம்

**திருச்செங்கோடு, ஜூலை 5:** செங்குந்தர் பொறியியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்செங்கோடு, தனது 25வது ஆண்டு வெள்ளி விழா கொண்டாடியது. இந்நிகழ்வுக்கு தலைவர் ஜான்சன்ஸ் நடராஜன், , செங்குந்தர் நிறுவனங்கள் கல்வித்துறை வளர்ச்சியில் கல்லூரி ஏற்படுத்திய தாக்கம் குறித்து உரையாற்றினார். பேராசிரியர். தாளாளர் பாலதண்டபாணி, பொருளாளர் தனசேகரன், செயல் இயக்குநர் அரவிந்திருநாவுக்கரசு ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர். முதல்வர் சதீஷ்குமார், கல்வி சாதனைகள், சுயாட்சி பெற்ற பங்கு, தொழில்துறை ஒத்துழைப்புகள் மற்றும் மாணவர் முன்னேற்றங்களை விளக்கினார். மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதையொட்டி வெள்ளி விழா அடையாள சின்னம் (லோகோ) வெளியிடப்பட்டது. மேலும் கல்லூரியின் தாளாளர் முதல் நாள் தொடங்கி 25 ஆண்டுகளாக கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர் பழனிசாமி மற்றும் மூத்த பேராசிரியர்கள் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்து பாராட்டினார்...



காலைக்கதிர் KAALAIKADHIR

### செங்குந்தர் இன்ஜி., கல்லூரியில் வெள்ளி விழா கொண்டாட்டம்

**திருச்செங்கோடு, ஜூலை 5**

திருச்செங்கோடு செங்குந்தர் இன்ஜினியரிங் கல்லூரி துவங்கி, 25ம் ஆண்டை முன்னிட்டு, வெள்ளி விழா கொண்டாடப்பட்டது. செங்குந்தர் கல்வி நிறுவனங்களின் தலைவர் ஜான்சன்ஸ் நடராஜன் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் சதீஷ்குமார் வரவேற்றார். பொருளாளர் தனசேகரன், செயல் இயக்குனர் அரவிந்திருநாவுக்கரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். தாளாளர் பாலதண்டபாணி, 'செங்குந்தர் பொறியியல் கல்லூரி, தரமான தொழில்நுட்ப கல்வியில் முன்னணியில் உள்ளது. கல்லூரியின் பயண வரலாற்றையும், எதிர்கால நோக்கங்களையும் நினைவுபடுத்தி கல்லூரி துவக்கம் முதல், 25 ஆண்டுகளாக கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர் பழனிசாமி உள்ளிட்ட மூத்த பேராசிரியர்களுக்கு சால்வை அணிவித்து, பாராட்டு வாழ்த்தி இனிப்பு வழங்கினார். தொடர்ந்து, வெள்ளி விழா அடையாள சின்னம் வெளியிடப்பட்டது. கல்லூரி துறை தலைவர்கள், பேராசிரியர்கள், பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

திருச்செங்கோடு செங்குந்தர் இன்ஜி., கல்லூரி தொடங்கி, 25 ஆண்டுகளானதையொட்டி, தாளாளர் பாலதண்டபாணி மாணவ, மாணவியருக்கு இனிப்பு வழங்கினார்.

## நுவலிதமிழ்மன்றம் - தினம்ஒருதிருக்குறள்



குறள் 570
கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை.

விளக்கம்
கொடுங்கோல் அரசு படிக்காதவர்களைத் தனக்கு பக்கபலமாக்கிக் கொள்ளும். அதைப்போல பூமிக்குப் பாரம் வேறு எதுவுமில்லை.

## இலக்கணக் குறிப்பறிதல்

உருபும் பயனும் உடன் தொக்க தொகை யும் தொகை மற்றும் தொகா நிலைத்தொடரின் ஒரு அங்கம்" ஆறு வேற்றுமை உருபுகளில் ஏதேனும் ஒரு உருபும்,பயனும் மறைந்து வருவது உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆகும்.

(எ. கா) பணப்பை

பணத்தைக் கொண்ட பை 'ஐ' எனும் வேற்றுமை உருபும்,'கொண்ட' என்ற பொருளும் தொக்கி(சுருங்கி/மறைந்து) ஒரே சொல்லில் வந்துள்ளது.

## பிறமொழிக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

பிறமொழி: அகம்பாவம் தமிழ்மொழி : தற்பெருமை